இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in
murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 108 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 12 – வெள்ளிக்கிழமை 28 நவம்பர் 2025 – மதுரை 16 + 12 + 20 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 108: Thiruvalluvar Year - 2056 - Karthigai 12 - Friday 28 November 2025 - Madurai 16 + 12+20 Pages ₹ 5.00


# கொள்கைப் பற்றோடு உழைப்பிலும் உயர்ந்து வரும் உதயநிதி!

## துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, நவ.28-**

**“கொள்கைப் பற்றோடு உழைப்பிலும் உயர்ந்து வரும் உதயநிதி” என்று அவரது பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

தி.மு.க. இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான நேற்று அடையாறு குறிஞ்சி இல்லத்தில் முக்கிய பிரமுகர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் சந்தித்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது. இதையடுத்து நேற்று காலை ஆழ்வார்ப்பேட்டையில் தனது தந்தையும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், தாயார் துர்கா ஸ்டாலின் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றார். அதன்பிறகு மெரினா கடற்கரையில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களுக்குச் சென்று மரியாதை செலுத்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.11.2025) முகாம் அலுவலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி.துர்கா ஸ்டாலின் உள்ளார்.

மேலும் வேப்பேரியில் உள்ள பெரியார் திடலுக்குச்சென்றுபெரியார்நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். அதன்பிறகு அடையாறு குறிஞ்சி இல்லத்தில் கட்சி நிர்வாகிகளை சந்தித்தார். அவர்கள் முன்னிலையில் கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடினார்.

மேலும் மூத்த முன்னோடிகள், மகளிர், கர்ப்பிணி பெண்கள், திருநங்கைகள், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. அதைப் போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும், உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**கொள்கைப் பற்றோடு உழைப்பிலும் உயர்ந்து வரும் உதயநிதிக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**இளைஞரணிச் செயலாளராக விளையாட்டுத் துறை அமைச்சராக மாண்புமிகு துணை முதலமைச்சராக நீ ஆற்றிவரும் பணிகளை மக்களும் கழகத்தினரும் பாராட்டிச் சொல்வதைக் கேட்கும்போது தந்தையாக மட்டுமல்ல தலைவனாக மகிழ்ச்சி அடைகிறேன்!**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைத் தொண்டனாக நான் உனக்கு அறிவுறுத்துவது, காட்சிக்கு எளியனாக, கடுஞ்சொல் சொல்லாதவனாக, மக்களின் அன்புக்குரியவனாக,எப்போதும் அவர்களுக்காகக் களத்தில் நிற்பவனாக நீ திகழ வேண்டும். இளைஞர்களிடம் திராவிட இயக்கக் கருத்தியலைத் தொடர்ந்து விதைத்து, அவர்களுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும்!**

**இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**





மதுரை

| POOL A | POOL D | POOL E |
|---|---|---|
| GERMANY | SPAIN | NETHERLANDS |
| CANADA | BELGIUM | MALAYSIA |
| SOUTH AFRICA | EGYPT | ENGLAND |
| IRELAND | NAMIBIA | AUSTRIA |

| DATE | POOL | TIME | MATCH | | |
|---|---|---|---|---|---|
| FRI 28 NOV | A | 09:00 | GERMANY | VS | SOUTH AFRICA |
| | A | 11:15 | CANADA | VS | IRELAND |
| | D | 13:30 | SPAIN | VS | EGYPT |
| | D | 15:45 | BELGIUM | VS | NAMIBIA |
| SAT 29 NOV | E | 09:00 | NETHERLANDS | VS | ENGLAND |
| | E | 11:15 | MALAYSIA | VS | AUSTRIA |
| | A | 13:30 | SOUTH AFRICA | VS | IRELAND |
| | A | 15:45 | CANADA | VS | GERMANY |
| SUN 30 NOV | D | 09:00 | EGYPT | VS | NAMIBIA |
| | D | 11:15 | BELGIUM | VS | SPAIN |
| | E | 13:30 | ENGLAND | VS | AUSTRIA |
| | E | 15:45 | MALAYSIA | VS | NETHERLANDS |
| MON 1 DEC | A | 13:30 | GERMANY | VS | IRELAND |
| | A | 15:45 | SOUTH AFRICA | VS | CANADA |
| TUE 2 DEC | D | 11:00 | SPAIN | VS | NAMIBIA |
| | D | 13:15 | EGYPT | VS | BELGIUM |
| | E | 15:30 | NETHERLANDS | VS | AUSTRIA |
| | E | 17:45 | ENGLAND | VS | MALAYSIA |
| | B | 20:00 | INDIA | VS | SWITZERLAND |
| WED 3 DEC | | REST DAY | | | REST DAY |
| THUR 4 DEC | 17/24 | 09:00 | POSITION 17 | VS | POSITION 24 |
| | 17/24 | 11:30 | POSITION 18 | VS | POSITION 23 |
| | 17/24 | 14:00 | POSITION 19 | VS | POSITION 22 |
| | 17/24 | 16:30 | POSITION 20 | VS | POSITION 21 |
| SAT 6 DEC | 21/24 | 09:00 | LOSER M37 | VS | LOSER M40 |
| | 21/24 | 11:30 | LOSER M38 | VS | LOSER M39 |
| | 17/20 | 14:00 | WINNER M37 | VS | WINNER M40 |
| | 17/20 | 16:30 | WINNER M38 | VS | WINNER M39 |
| MON 8 DEC | 23/24 | 09:00 | LOSER M49 | VS | LOSER M50 |
| | 21/22 | 11:30 | WINNER M49 | VS | WINNER M50 |
| | 19/20 | 14:00 | LOSER M51 | VS | LOSER M52 |
| | 17/18 | 16:30 | WINNER M51 | VS | WINNER M52 |

சென்னை

| POOL B | POOL C | POOL F |
|---|---|---|
| INDIA | ARGENTINA | FRANCE |
| OMAN | NEW ZEALAND | AUSTRALIA |
| CHILE | JAPAN | KOREA |
| SWITZERLAND | CHINA | BANGLADESH |

| DATE | POOL | TIME | MATCH | | |
|---|---|---|---|---|---|
| FRI 28 NOV | C | 13:15 | ARGENTINA | VS | JAPAN |
| | C | 15:30 | NEW ZEALAND | VS | CHINA |
| | B | 17:45 | OMAN | VS | SWITZERLAND |
| | B | 20:30 | INDIA | VS | CHILE |
| SAT 29 NOV | F | 13:15 | FRANCE | VS | KOREA |
| | F | 15:30 | AUSTRALIA | VS | BANGLADESH |
| | B | 17:45 | CHILE | VS | SWITZERLAND |
| | B | 20:00 | OMAN | VS | INDIA |
| SUN 30 NOV | C | 13:15 | JAPAN | VS | CHINA |
| | C | 15:30 | NEW ZEALAND | VS | ARGENTINA |
| | F | 17:45 | KOREA | VS | BANGLADESH |
| | F | 20:00 | AUSTRALIA | VS | FRANCE |
| MON 1 DEC | C | 17:45 | JAPAN | VS | NEW ZEALAND |
| | C | 20:00 | ARGENTINA | VS | CHINA |
| TUE 2 DEC | B | 13:30 | CHILE | VS | OMAN |
| | F | 15:45 | FRANCE | VS | BANGLADESH |
| | F | 18:00 | KOREA | VS | AUSTRALIA |
| WED 3 DEC | | REST DAY | | | REST DAY |
| THUR 4 DEC | 9/16 | 12:30 | POSITION 9 | VS | POSITION 16 |
| | 9/16 | 15:00 | POSITION 10 | VS | POSITION 15 |
| | 9/16 | 17:30 | POSITION 11 | VS | POSITION 14 |
| | 9/16 | 20:00 | POSITION 12 | VS | POSITION 13 |
| FRI 5 DEC | QF² | 12:30 | POSITION 1 | VS | POSITION 8 |
| | QF² | 15:00 | POSITION 2 | VS | POSITION 7 |
| | QF² | 17:30 | POSITION 3 | VS | POSITION 6 |
| | QF² | 20:00 | POSITION 4 | VS | POSITION 5 |
| SAT 6 DEC | 13/16 | 12:30 | LOSER M41 | VS | LOSER M44 |
| | 13/16 | 15:00 | LOSER M42 | VS | LOSER M43 |
| | 9/12 | 17:30 | WINNER M41 | VS | WINNER M44 |
| | 9/12 | 20:00 | WINNER M42 | VS | WINNER M43 |
| SUN 7 DEC | 5/8 | 12:30 | LOSER M45 | VS | LOSER M48 |
| | 5/8 | 15:00 | LOSER M46 | VS | LOSER M47 |
| | SF | 17:30 | WINNER M45 | VS | WINNER M48 |
| | SF | 20:00 | WINNER M46 | VS | WINNER M47 |
| TUE 9 DEC | 15/16 | 12:30 | LOSER M53 | VS | LOSER M54 |
| | 13/14 | 15:00 | WINNER M53 | VS | WINNER M54 |
| | 11/12 | 17:30 | LOSER M55 | VS | LOSER M56 |
| | 9/10 | 20:00 | WINNER M55 | VS | WINNER M56 |
| WED 10 DEC | 7/8 | 12:30 | LOSER M57 | VS | LOSER M58 |
| | 5/6 | 15:00 | WINNER M57 | VS | WINNER M58 |
| | BRONZE | 17:30 | LOSER M59 | VS | LOSER M60 |
| | GOLD | 20:00 | WINNER M59 | VS | WINNER M60 |

செ.ம.தொ.இ./1410/வரைகலை/ 2025